අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/05/68/03/187/අතිකාල

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2020.02

சுற்றறிக்கை எண்.12/2020
அமைச்சின் சகல பணிக்குழுவினருக்கும்

கூடுதல் நேர சேவையில் ஈடுபடுத்தல் மற்றும் கொடுப்பனவை அனுமதித்தல்

அமைச்சுப் பணிக்குழுவினர் கடமைகளின் விளைத்திறன் மற்றும் பண்புத்தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்காக பின்வரும் ஆலோசனைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அவசியம் என்பதை அறியத்தருகின்றேன்.

01 அரச நிர்வாக சுற்றறிக்கை அல்லது வேறு விதிமுறைகளின் மூலமாக வேறு விதத்தில் கட்டளை பிறப்பிக்கப்படாத கூடுதல் நேர சேவையில் ஈடுபடுவதற்கான உரிமைப்பெற்ற சகல பணியாளர்கள் தொடர்பில், மாதாந்தம் அனுமதிக்கக் கூடிய அதிகபட்ச கூடுதல் நேர மணித்தியாளங்கள் தாபனக்கோவையின் VIII ஆம் அத்தியாத்தின் 7 ஆம் வாசகத்திற்கமைவாக இருபது (20) மணி நேரத்திற்கு மீகாமல் இருக்க வேண்டும்

02 கூடுதல் நேர சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் மற்றும் கூடுதல் நேர கொடுப்பனவுகளுக்காக மேலதிக செயலாளரின் (நிர்வாகம்) முன் ஒப்புதலை பெறுவது கட்டாயம் என்பதுடன், அது தொடர்பான 2015.10.20 ஆம் திகதிய இலக்கம் 25/2015 கொண்ட உள்ளக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும்

03 திறவுகோல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அலுவலக பணியாளர்களைத் தவிர, எந்தவொரு அலுவலர்/அலுவலர்கள் அவரின்/அவர்களின் ஒவ்வொரு செயலை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த கூடுதல் நேர 20 மணித்தியாளங்களுக்கு மேல் சேவையில் ஈடுபடுத்தும் தேவை ஏற்படுமெனில் மற்றும் அந்த அலுவலர்/அலுவலர்கள் கூடுதல் நேர சேவையில் ஈடுபடுத்துதல் குறித்து தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாத்தின 2 மற்றும் 3 ஆம் வாசகங்களுக்கு அமைவாக இணங்கும் பட்சத்தில் அது குறித்து உரிய பிரிவுக்குப் பொறுப்பான மேலதிக செயலாளரின் தனிப்பட்ட பரிந்துரையும் கூடுதல் நேர விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்

04 கூடுதல் நேர சேவையில் ஈடுபடுத்துவதற்கு எதிர்பார்க்கும் அலுவலர்களின் நாளாந்த பணி அறிக்கையானது பொதுவான கடமை காலங்கள் குறித்தும் தயாரிக்கப்பட வேண்டியதுடன், பூர்த்தி செய்யப்படும் வேலை அலகு ரெடர்பான நாளாந்த அறிக்கை கிளைக்கு பொறுப்பான அலுவலரின் பொறுப்பில் இற்றைப்படுத்தி பேணப்படல் வேண்டும். அத்துடன் கூடுதல் நேர கொடுப்பனவுகளை வழங்குவது தொடர்பான வவுச்சர்களை பரிந்துரை செய்தல் மற்றும் அனுமதித்தலை மேற்கொள்ளும் அலுவலர்கள் அந்த அறிக்கைகளை பரிசீலனை செய்யப்படும் என்பதையும் மற்றும் தாபனக் கோவையின் VIII ஆம் அத்தியாத்தின 5 ஆம் வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் பின்பற்றப்படும் என்ற பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

05 இந்த ஆலோசனைகள் குறித்து தமக்கு கீழே உள்ள சகல அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு சகல கிளை அலுவலர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

மேற்படி விதிமுறைகள் தற்போது செயலில் உள்ள இடைக்கால கணக்கறிக்கையின் நிதி ஒதுக்கீடு நிலைமையை கருத்திற்கொண்டு 2020.02.01 ஆம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை நடைமுறையில் இருக்கும் என நினைவில் கொள்ளவும்.

எம்.எச்.எம். சிதரானந்த
கல்விச் செயலாளர்

பிரதிகள் -
01 சகல மேலதிக செயலாளர்கள்
02 பணிப்பாளர் நாயகம் (நிதி)
03 பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்)
04 தலைமை நிதி அலுவலர்
} த. த.அ.கொ. மற்றும் தே.ந.எ

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk